**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.47** **நாள் : 14.04.2024**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 18 வது மக்களவைக்கான பொதுத்தேர்தல்கள் 2024, தமிழ்நாட்டில் வருகின்ற 19.04.2024 அன்று ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதனையொட்டி சென்னை மாவட்ட காவல்துறையில் பணியாற்றுபவர்களில் தபால் வாக்கு கேட்டு விண்ணப்பித்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் அனைவருக்கும் 11.04.2024 முதல் 13.04.2024 வரை தபால் வாக்கு செலுத்த சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 3 தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அலுவலகத்தில் சிறப்பு தபால் வாக்குச்சாவடி (Facilitation Centre) அமைக்கப்பட்டு தபால் வாக்குகள் செலுத்தப்பட்ட நிலையில், மேலும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் தபால் வாக்குகள் செலுத்துவதற்கான நாள் 15.04.2024 வரை நீட்டிக்கப்பட்டு, அதன்படி இன்று (14.04.2024) சென்னையில் உள்ள மூன்று தேர்தல் நடத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் அமைக்கப்பட்ட சிறப்பு தபால் வாக்குச்சாவடியில், காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் தபால் வாக்குகளை செலுத்தினர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**